**சென்னை 5 நிலஅளவைப் பதிவேடுகள் துறை மண்டலத் துணை இயக்குநர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை திரு..மு.வெங்கடேசன், எம்.ஏ,**

ந.க.அ2/3156/2023 நாள் 26 .12.2023

| | | |
|---|---|---|
| பொருள் : | | நேரடி நியமனம் – தமிழ்நாடு அச்சுப்பணி – இளநிலை உதவியாளர் இனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IVன் கீழ் தேர்வு செய்யப்பட்டு நிலஅளவை பதிவேடுகள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – திருமதி.கி.சுமதி என்பவர் சென்னை மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 13.06.2019 முற்பகல் பணி ஏற்பு செய்தது – பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| பார்வை : | 1. | தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை கடிதம் எண் 1162/PSD–H1/2019 நாள் 01.04.2019 |
| | 2. | சென்னை நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர்(பொ) செயல்முறை ஆணை ந.க.ர2/88646/2019 (நி.அ) நாள் 29.05.2018 |
| | 3. | சென்னை மண்டல துணை இயக்குநர் செயல்முறை ஆணை ந.க.அ2/4307/2019 நாள் 10.06.2019 |
| | 4. | மாநில கூர்நோக்கு குழு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமை செயலகம், சென்னைசெயல்முறை ஆணை எண் 1427/CV–2(1)/2020–6 நாள் 24.11.2023 |

-----------

ஆணை,

வேலூர் நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் (சென்னை மண்டல துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து இயக்கக உத்தரவின்படி குடும்ப சூழ்நிலை காரணமாக மாவட்ட மாறுதலில்) இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.கி.சுமதி என்பவர் பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, தொகுதி IVன் கீழ் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2 மற்றும் 3–ல் காணும் இயக்கக மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்தில் 13.06.2019முப நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி திருமதி.க.சுமதி என்பவர் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் S.T இன பிரிவின்கீழ் தெரிவு செய்யப்பட்டு, தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட பழங்குடியினர் (S.T) சாதி சான்றின் உண்மை தன்மை சரிபார்க்கும் பொருட்டு மாநில கூர்நோக்கு குழுவிற்கு (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை 4–ல் காணும் மாநில கூர்நோக்கு குழுவின், (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) செயல்முறை ஆணையில் தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட பழங்குடியினர் "இந்து–மலையாளி" (S.T) சாதி சான்று உண்மையானது ("Genuine") என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவிவரங்களின்படி மாநில கூர்நோக்கு குழுவினால் தனியரது பழங்குடியினர் ("இந்து–மலையாளி") சாதி சான்று உண்மையானது என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 13.06.2019முப தனியரது பணியினை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த பணிவரன் முறையானது சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியருக்கான தகுதிகாண் பருவம் துவங்கப்படுகிறது (Commencement of Probation) எனவும், தகுதிகாண் பருவம் விளம்பல் செய்திட அரசு நிர்ணயித்துள்ள தகுதிகளான பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் துறைத்தேர்வில் தேர்ச்சி பெறவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்டல துணை இயக்குநர் (பொ)
நிலஅளவை பதிவேடுகள் துறை
சென்னை – 5

26.12.23

<u>பெறுநர்</u>
திருமதி.கி.சுமதி, இளநிலை உதவியாளர்
உதவி இயக்குநர் அலுவலகம்
நிலஅளவை பதிவேடுகள் துறை, வேலூர்
(உதவி இயக்குநர் மூலமாக)

நகல்
உதவி இயக்குநர்
நிலஅளவை பதிவேடுகள் துறை, வேலூர்
(தனியருக்கு பணிவரன்முறை ஆணையினை சார்புசெய்து சார்பு நகல் அனுப்பிவைக்க மற்றும் பணிபதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்வது தொடர்பாக)

நகல்
இயக்குநர்,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம்
சேப்பாக்கம், சென்னை – 5 (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடுகள் துறை,
வேலூர் - 9.

29.12.23